(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(2).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 பெப்ரவரி 21 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2023 மார்ச் 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த “நல்லாட்சி அரசாங்கம்” ஆட்சியிலிருந்தபோது இலங்கை மத்திய வங்கியில் பிணைமுறி மோசடி இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியானது எந்த அமைச்சின் கீழ் இருந்தது என்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பத்தில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரின் பெயர் மற்றும் அமைச்சுச் செயலாளரின் பெயர் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

378/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iv) இலங்கையின் பாடசாலைக் கல்வியில் முரண்பாடு காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) மேற்படி முரண்பாட்டை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2021 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையானது, பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக யாதென்பதையும்;

(iii) பரீட்சையில் சித்தியடைந்து பிரபல்யமான பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி எண்ணிக்கையானது, பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

416/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கைப் பொலிஸ் வசமுள்ள உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் மோப்ப நாய்களின் வகைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வகைக்கும் ஏற்ப உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ பொலிஸ் மோப்ப நாய் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் வரை பொலிஸ் உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் படி தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

442/2023

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாத்தறை, வேரதூவ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை, பிரதேசத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பயிற்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தினர் என்பதையும்;

(ii) மேற்படி மைதானத்தை வியாபார நடவடிக்கையொன்றிற்கு வழங்க முன்னாள் பிரதேச செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலத்தை வழங்கும்போது கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரம் கோரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் கேள்விப்பத்திரத்தின் பெறுமதி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட நபரது/ நிறுவனத்தினது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பிரதேச மக்களுக்கு மீண்டும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

684/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலகத்துக்கென கணக்காளரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகத்துக்கு கணக்காளரொருவரை நியமிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று, களுவாஞ்சிக்குடி மற்றும் போரத்தீவுபற்று ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளினதும் சனத்தொகை அதிகமென்பதால் மேற்படி ஒவ்வொரு பிரிவையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

814/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தேவையான முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட, மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுமாயின், அத்தட்டுப்பாடானது அன்றாட மற்றும் மாதாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முட்டை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அன்றாடம் 1000 இற்கும் மேற்பட்ட, 10,000 இற்கும் மேற்பட்ட மற்றும் 100,000 இற்கும் மேற்பட்ட முட்டைகள் எனும் ஒவ்வொரு தொகுதியின் கீழ் முட்டைகளை உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தொகுதியின் கீழ் நாளொன்றில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முட்டை ஒன்றினை இறக்குமதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றினை நுகர்வோருக்கு வழங்கக் கூடிய விலை எவ்வளவு என்பதையும்;

(iii) முட்டை உள்ளிட்ட சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் ஏமாற்று வியாபாரிகளால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

831/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 746-இந்திரிலிகொட கிராம அலுவலர் பிரிவின், பாடசாலை வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்யும் அடிப்படைப் பணிகள் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ii) அதற்கமைய, முதற் கட்டமாக மேற்படி வீதியில் கொன்கிறீட் கற்கள் இடப்பட்டன என்பதையும்;

(iii) தற்போது மேற்படி கொன்கிறீட் கற்கள் மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதன் காரணமாக வீதி சேதமடைந்து போக்குவரத்துக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாது என்பதையும்;

(iv) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் காரணமாக நிதி விரயமாகி இருப்பின், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

832/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

847/2023

கௌரவ காமினி வலேபொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இரசாயன பசளைக்கான தடை காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல், தேயிலை, இறப்பர், கறுவா, தென்னை மற்றும் காய்கறிகள் போன்ற ஒவ்வொரு பயிர் வகையினதும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தனித் தனியே யாதென்பதையும்;

(iii) இரசாயனப் பசளையை தடை செய்ததன் காரணமாக விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகி உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

858/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019-2022 காலப்பகுதியில் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட, ஓட்டமாவடியிலுள்ள கொவிட்-19 காரணமாக இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட கொவிட்-19 காரணமாக இறந்த உடல்களின் மொத்த எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) மேலே சொல்லப்பட்ட இறந்த உடல்களின் எண்ணிக்கையை அவற்றின் வயது, பால், இனம், மதம் மற்றும் வதிவிட மாகாணம்/மாவட்டம் ஆகியவற்றுக்கு இணங்க வெவ்வேறாகவும்;

(iii) கொவிட்-19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் இடமாக அரசாங்கம் ஓட்டமாவடியைத் தெரிவுசெய்தமைக்கான அடிப்படையையும்;

(iv) ஓட்டமாவடியைப் போன்று அதே அடிப்படையையும் பிரமாணங்களையும் பயன்படுத்தி அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கொவிட்– 19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் இடமாக/ இடங்களாக ஓட்டமாவடி தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தை/ இடங்களைத் தெரிவுசெய்வதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2023 மார்ச் 07, செவ்வாய்க்கிழமை)**

846/2023

கௌரவ காமினி வலேபொட,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் நடாத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் கொழும்பு, கம்பஹா, கண்டி, குருநாகல், காலி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய ஒவ்வொரு மாவட்டங்களிலும் அதிகூடிய வெட்டுப்புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1296/2023

கௌரவ அலி சப்ரி ரஹீம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 01-802666 எனும் ஓய்வூதிய இலக்கத்தைக் கொண்ட திரு. எம். நயீமுல்லாஹ் அவர்களுக்கு 2021.12.31 ஆம் திகதியுடன்கூடிய திருத்தப்பட்ட ஓய்வூதிய வழங்கல் பத்திரத்திற்கமைவாக கிடைக்கப்பெற வேண்டிய மாதாந்த ஓய்வூதியமானது 31,833.33 ரூபாவாகும் என்பதை அறிவாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அவருக்கு மேற்படி ஓய்வூதியம் இறுதியாகச் செலுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அவ்வாறு செலுத்தப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட பி.வூ.கி.36/202 ஆம் இலக்கமுடைய 2022.10.30 ஆம் திகதிய கடிதத்தின் மூன்றாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) நிலுவைச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியத்தை திரு.எம்.நயீமுல்லாஹ் அவர்களுக்கு வழங்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 மார்ச் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

863/2023

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆண்டு தொடக்கம் இதுவரை வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன, கடனுதவிச் சங்கத்திடமிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பதாரிகளுள் இதுவரை கடன் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுள் இதுவரை கடன் வழங்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளுக்கு துரிதமாக கடன் வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1297/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்கூட்டுத்தாபனத்தில் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகவுள்ள கப்பல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி கூட்டுத்தாபனத்தின் இலாபம்/நட்டம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1302/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு புகையிரத்தினதும் சேரிடம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) பொருட்களை ஏற்றிச் செல்வதன் பொருட்டு அதிகமாக புகையிரதங்களை ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1307/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை சீமேந்துத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கான முதலீடு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான முதலீட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1315/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு வாசனைத்திரவியங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வாசனைத்திரவியங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாசனைத்திரவிய வகைகளுக்கும் அமைய, இலங்கைக்கு வருடாந்தம் அவசியமான அளவுகள் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) இலங்கையில் பயிரிடப்படுகின்ற ஒவ்வொரு வகையான வாசனைத் திரவியங்களினதும் வருடாந்த அறுவடை தனித்தனியே யாதென்பதையும்;

(v) இறக்குமதி செய்யப்படுகின்ற வாசனைத்திரவிய வகைகளின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1320/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எலஹெர – கிரித்தலய சரணாலயத்தின் பரப்பளவு, ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி சரணாலயத்திற்குச் சொந்தமான சுமார் 250 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் பாரிய சூழல் அழிவு ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது தொடர்பாக அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1326/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு இலங்கையில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) 2020/2021 பெரும் போகத்தில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி போகத்தில் பயிர்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டு சோள விதைகளின் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

(iv) ஒரு கிலோகிராம் உள்நாட்டு சோள விதையின் விலை மற்றும் ஒரு கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட சோள விதையின் விலை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு ஏக்கரில் சோளப் பயிர் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான விதைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி விதைகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1456/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கறவை மாடுகளுக்கு தீவனப் புல் இல்லாத காரணத்தினால் கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த சிறிய அளவிலான பாற்பண்ணையாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) புண்ணாக்கு மற்றும் கறவை மாடு வளர்புக்குத் தேவையான இதர பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதால் அவற்றைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பாற்பண்ணையாளர்களைப் பாதுகாப்பதற்கும் கறவை மாடுகளுக்குத் தேவையான தீவனங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 மார்ச் 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்த 2015-2019 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி மோசடி இடம்பெற்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மோசடி காரணமாக இடம்பெற்றுள்ள நிதிசார் நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொகையை மீள அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மோசடியுடன் தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

379/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள பைனஸ் மற்றும் டர்பன்டைன் தாவரங்கள் காரணமாக ஏற்படும் சுற்றாடல் அழிவு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி தாவரங்களை அகற்றுவதற்கான வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பைனஸ் மற்றும் டர்பன்டைன் தாவரங்கள் பயிரிடப்பட்டுள்ள அரச காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) அரச காணிகளில் பயிரிடப்பட்டுள்ள பைனஸ் மற்றும் டர்பன்டைன் தாவரங்களை அகற்றி இக்காணிகளை பயிர்ச்செய்கைக்காக இளம் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

417/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பிரதானமாக திரவப் பால் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் உற்பத்தி செய்யப்படும் திரவப் பாலின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இன்றளவில் நிறுவப்பட்டுள்ள திரவப் பால் சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரவப் பால் உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கான கொள்ளளவினை அதிகரிப்பதற்காக சூரிய சக்தியில் இயங்கும் சிறியளவிலான பால் குளிரூட்டும் தொழில்நுட்ப முறை இன்றளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

473/2023

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 சனவரி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய சம்பளக் கட்டமைப்பின் காரணமாக பல்கலைக்கழகங்களின் கல்விசாரா மற்றும் நிர்வாக சேவைகளில் சம்பள முரண்பாடு ஏற்பட்டது என்பதையும்;

(ii) இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்ட போதிலும், இற்றைவரை எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என்பதையும்;

(iii) இதன் விளைவாக, மேற்படி சேவைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி சம்பள முரண்பாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சம்பள முரண்பாட்டினை நீக்கி இவ்வுத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளையும் செலுத்தித் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

685/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் நீர்த்தாங்கியின் நிர்மாணப் பணிகள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு பணம் செலுத்தாமை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அதன் காரணமாக தமன பிரதேசத்திலிருந்து நேரடியாகவே நீர் வழங்கப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், தமன பிரதேசத்தில் இருந்து பிரதான நான்கு பிரிவுகளுக்கு நீர் வழங்கப்படுவதன் காரணமாக ஏற்பட்டுள்ள சிரமங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது நீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் நீர் வழங்குவதற்காக நீர்க்குழாய்கள் பொருத்த வேண்டியுள்ள கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

815/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் கீழ் இயங்கி வருகின்ற வைத்தியசாலைகளின் எண்ணிக்கையானது, அவ்வைத்தியசாலைகளின் வகைப்படுத்தலுக்கு அமைவாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அவ்வைத்தியசாலைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள கட்டில்களின் எண்ணிக்கையும் சாதாரண விடுதிகளில் உள்ள கட்டில்களின் எண்ணிக்கையும் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களின் மொத்த எண்ணிக்கையானது, வைத்திய நிபுணர்கள் மற்றும் சாதாரண வைத்தியர்கள் என்ற அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருந்து வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அம்மருந்து வகைகளுள் தற்போது தட்டுப்பாடு நிலவுகின்ற மருந்து வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கைக்குத் தேவையான மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தினால் வருடமொன்றில் செலவிடப்படும் நிதித் தொகையானது இலங்கை ரூபாயிலும் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலும் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

833/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மத்திய கிழக்கு நாடுகளில் பேணப்பட்டு வருகின்ற தூதுவராலயங்களின் கீழ் பாதுகாப்பு இல்லங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) அப் பாதுகாப்பு இல்லங்களில் போதிய இடவசதிகள் இல்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக பாதுகாப்பைக் கோரி அவ்வில்லங்களுக்கு வரும் வீட்டுப் பணிப்பெண்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பாதுகாப்பு இல்லங்களிலும் இன்றளவில் தங்கியிருக்கும் இலங்கை வீட்டுப் பணிப்பெண்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அவ்வீட்டுப் பணிப்பெண்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

848/2023

கௌரவ காமினி வலேபொட,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2019 டிசம்பர் மாதத்தில் அப்போதைய நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை ஒன்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வரி மறுசீரமைப்புகளின் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் அரச வரி வருமானம் வருடாந்தம் சுமார் 600 பில்லியன் ரூபாவை இழந்தது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வரி மறுசீரமைப்புகளின் காரணமாக அரச வருமானம் குறைவதால் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகள் குறித்து மேற்படி வரி மறுசீரமைப்புகளைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்களினால் அரசாங்கத்திற்கு அல்லது அமைச்சரவைக்கு நிபுணர் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) மேற்படி வரி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வருடாந்தம் அரசாங்கம் இழக்க வேண்டியேற்படும் என மதிப்பிடப்பட்ட வரி வருமானம் ஒவ்வொரு வரி வகையின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வரி மறுசீரமைப்புகளின் காரணமாக அரச வரி வருமானம் குறைவதால் அரச வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சியை தீர்க்கும் விதத்தை குறிப்பிட்ட வரி மறுசீரமைப்புப் பிரேரணைகளைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு முன்வைத்திருந்தனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1502/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் பயன்படுத்தப்படும் பலநாள் மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றுள் செய்மதி தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டுள்ள படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) பலநாள் மீன்பிடிப் படகுகளுக்கு செய்மதி தொழில்நுட்ப வசதிகளை வழங்கும் கருத்திட்டம் தற்போது நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், இக்கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்ய எதிர்ப்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1537/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நெற் செய்கையின் போதும் வீட்டுத் தோட்ட செய்கையின் போதும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் உச்சமட்ட பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) களைகளைக் கட்டுப்படுத்தும் போதும் பீடைகள் மற்றும் பூச்சிகளின் தீங்குகளின் போதும் கிருமிநாசினி மற்றும் களைநாசினி விற்பனையாளர்களின் ஆலோசனைகளைப் பெற வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி விற்பனையாளர்களினால் அதிக விலைகளில் மேற்படி நாசினி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இந்த நிலைமையைத் தடுப்பதற்காக விவசாயத் திணைக்களத்தினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 மார்ச் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

859/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்– 19 காரணமாக இறந்த உடல்களின் தகனம் தொடர்பாக 'நிபுணர்களின் குழு' ஒன்றினால் சுகாதார அமைச்சு அதன் கொள்கை தொடர்பாக பிழையாக வழிகாட்டப்பட்டதாக 2022.11.29 ஆம் திகதி சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றை சுகாதார அமைச்சர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவாயின் —

(i) விசேடமாக கொவிட்-19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அகற்றுதல் பற்றிய அதன் விதப்புரைகளையும்;

(ii) நியமன அதிகாரியையும்;

(iii) விசாரணை நியதிகள் அத்துடன்/அல்லது ஆணையையும்;

(iv) உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்களின் பதவிகளையும்;

(v) தவிசாளரின் பெயரையும்;

(vi) அது தொடர்ச்சியாக கூடுகின்றதா என்பதையும்;

(vii) இன்றேல், அது கடைசியாக கூடிய திகதியையும்;

(viii) இற்றை வரை நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையையும்;

(ix) கூட்டங்கள் நடைபெற்ற இடத்தையும்;

(x) ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை வகித்த தனிப்பட்ட ஆட்களின் பெயர்களை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

864/2023

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன, கடனுதவிச் சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தினர் லொத்தர் சீட்டொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றனர் என்பதையும்;

(ii) அதற்காக அச்சங்கத்தினுடைய அங்கத்தவர்களின் விருப்பமின்றி அவர்களிடமிருந்து 100 ரூபாவினை அறவிடுவதற்கு முயற்சித்து வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குவதற்காகவுள்ள பணத்தினை லொத்தர் சீட்டுக்காக ஒதுக்கியமை தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1298/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் அரச வைத்தியசாலைகளில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பணத்தொகையைப் பயன்படுத்தி மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1303/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள மகாவலி வலயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ் வலயங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் உணவு உற்பத்திக்கு மகாவலி வலயங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு சதவீத ரீதியில் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற் குறிப்பிட்ட பங்களிப்பை மேலும் அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1310/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் நீர் மின் உற்பத்தி எவ்வளவு என்பதையும்;

(ii) அதன் கட்டுமானத்திற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் ஆலைக் காரணி (Plant factor) எவ்வளவென்பதையும்,

(iv) மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தி நிலையத்தை தேசிய மின்கட்டமைப்பில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1316/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாவனெல்லை, தெவனகல ரஜமகா விகாரையானது எவ்வளவு தொன்மையானது என்பதையும்;

(ii) மேற்படி விகாரையிலிருந்து தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி சான்றுகளைப் பாதுகாப்பதற்காக இன்றளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1321/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மின்னேரியா மற்றும் கவுடுல்ல ஆகிய தேசியப் பூங்காக்களில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடன் "ஹுருலு பரிசர வனோத்யான சங்வர்தன சமித்திய" என்ற பெயரில் அமைப்பொன்று தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) குறித்த அமைப்பு வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குறித்த அமைப்பினால் அரச நிதிக் கொள்கைக்கு முரணாக ஒரு கோடி எழுபது இலட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிறுவனத்தால் புரியப்பட்டுள்ள நிதி மோசடி தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1327/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) எப்பாவல, வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனியில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அதில் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எப்பாவல, வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனியினால் மாதாந்தம் எத்தனை தொன் உரம் உற்பத்திச் செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) 50 கிலோகிராம் உர மூடையொன்றை உற்பத்தி செய்வதற்கு செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) உர உற்பத்தியில் பங்கெடுக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற் குறிப்பிட்ட நிறுவனம் நட்டத்தில் இயங்குமொரு நிறுவனமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1457/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் விநியோகிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில் இலத்திரனியல் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு, நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1503/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பின்னவல மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்படி மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி மிருகக்காட்சிசாலைக்கு எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 2/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 8/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2023

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2023

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2023

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2023

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2023

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2023

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2023

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2023

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2023

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2023

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.